**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்புடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கதயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லதுதவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்துவிடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம்நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம்பொறுப்பாக உள்ளது.நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவு தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) | உரிய பணி நிறைவு செய்யப்பட்டு 10 நாட்களினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டினுள் 93 சந்தர்ப்பங்களில் வெளியிடப்பட்ட ரூபா 2,487,448 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அதன் தாமத காலம் 1 முதல் 10 மாதங்களுக்கு இடைப்பட்டதாகும். | 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான தீர்க்கப்படாத முற்பணங்களாக காண்பிக்கப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 54,500 ஆன தொகை மற்றும் 2020 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 98,300 ஆன தொகை 2022.05.26 ஆந் திகதியளவில் முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 826,262 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 2,968,095 ஆகும். அதற்கமைய நிதிப்பெறுபேறுகளில் ரூபா 2,141,833 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு திறைசேரியிலிருந்து வழங்கப்படும் மானியங்கள் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபையின் 1929 தொலைபேசி இலக்கத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொருத்தமான நடைமுறையொன்றினை தயாரித்தல் மற்றும் உரிய | மென்பொருளுடன் இந்த 1929 தரவுக் கட்டமைப்பு இணங்கவில்லை என்பது. | பரிந்துரைகளை செயற்படுத்து வதற்கு தரவுக் கட்டமைப்பில் நிலவும் குறைபாடுகளை துரிதமாக நிவர்த்தி |

| | | |
|---|---|---|
| நடைமுறையை மேம்படுத்துவதற்கு பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காக மதியுரையாளர் ஒருவருக்கு ரூபா 900,000 செலுத்தப்பட்டு 2017 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கைக்காக 4 வருட காலம் கடந்திருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் நடைமுறைகள் பின்பற்றுவது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிராததுடன் கணனி கட்டமைப்பை தயாரிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 1,200,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் தரவுக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | | செய்யும் வகையில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

### 3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளானோரை பாதுகாத்தல் மற்றும் அவர்களின் உரிமைகளை காத்தல் மற்றும் எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு தேவையான நிதியேற்பாட்டிற்கு 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் 2018 ஆம் ஆண்டு முதல் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அதில் ரூபா 2,843,882 ஆன மீதியொன்று நிலவியது. | இந்நிதியத்தின் மீதியினை பரிசோதித்து உரிய முறையில் செலவினம் மேற்கொள்ள வேண்டுமென்பதால் பரிசோதனை மேற்கொண்டு நிதியேற்பாடுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக நிதியத்தினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 1 முதல் 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலவும் | எஞ்சியுள்ள நிதியினை நிதியத்தின் | அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை |

| | | |
|---|---|---|
| ரூபா 1,868,850 கூட்டுத்தொகையான 3 நிதியங்கள் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நோக்கங்களுக்கு ஈடுபடுத்துதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் மேலதிக பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | நிறைவேற்றுதல் தொடர்பில் நிதியத்தினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் 30 வருட குத்தகைக் காலத்திற்காக ரூபா 18,117,757 பெறுமதிக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த காணியொன்று அறிக்கையின் திகதி வரையிலும் எந்த பணியிலும் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | திறைசேரியின் நிதியேற்பாடுகளை திட்டமிட்டு கோரியிருந்த போதிலும் நிதியேற்பாடு கிடைக்காத காரணத்தினால் நிர்மாண பணிகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. | வளங்கள் உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். |

**3.4 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் உதவி முகாமையாளர் (நிகழ்ச்சித் திட்டங்கள்) பதவியினை வகித்த பெண் உத்தியோகத்தர் 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சம்பளம் மற்றும் படிகளை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் வெளிவாரி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப்பதவிக்காக மற்றுமொரு உத்தியோகத்தரின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் உரிய பெண் உத்தியோகத்தரிடம் வினவப்பட்ட போதிலும் அதற்குரிய பதிலாக குறித்த பெண் உத்தியோகத்தர் சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் வர்த்தக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்தவுடன் இந்த அதிகார சபையின் நிரந்தர பதவியில் கடமைகளுக்கு அறிக்கையிடுவதாக தெரிவித்துள்ளார். | மனிதவள முகாமைத்துவம் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 4½ வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்ட உதவிப் பணிப்பாளர் (ஊடகம் மற்றும் தகவல்) பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்கப்பட்ட அடிப்படை தகைமை மற்றும் சேவை அனுபவம் இல்லாத உத்தியோகத்தர் ஒருவர் 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். | பணிப்பாளர் சபையின் தீர்மானம் 201/26 இன் பிரகாரம் இந்த விண்ணப்பதாரியின் ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் குறித்த ஆண்டறிக்கைகள் 2022 மே 19 கணக்காய்வுத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை மொழி பெயர்க்கப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை வரைபாக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 4.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபை நிறுவப்பட்டு 20 வருடங்கள் கடந்த பின்னர் 2019 ஒக்தோபர் 29 ஆந் திகதி அங்கீகாரம் | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் தேசிய பெறுகைகள் திணைக்களத்தின் | சிறுவர் பாதுகாப்பு கொள்கையை நடைமுறைப்படுத்த துரித நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருந்த தேசிய சிறுவர் பாதுகாப்பு தேசிய கொள்கை 2022 மே 05 கணக்காய்வுத் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிராத காரணத்தினால் தேசிய கொள்கையை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்துவதற்கு உரிய சட்ட, நிர்வாக அல்லது ஏனைய திருத்தப்பட்ட பரிந்துரைகளை மேற்கொள்ளும் பணிகள், சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்குதல் உள்ளடங்கலாக அதனோடு தொடர்புடைய பணிகளும் நிறைவேறியிருக்கவில்லை. | பரிந்துரைகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. | எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைக்கும் முறைப்பாடுகளை சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பிரிவின்ஊடாக பொலிஸ் பிரிவு, விசாரணைப் பிரிவு, மனோத்துவ சமூக பிரிவு மற்றும் சட்டப்பிரிவு ஆகியவற்றிற்கு அனுப்பப்படுவதுடன் 2011 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் அதிகார சபைக்கு அறிக்கையிடப்பட்டிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையான 100,592 இல் தீர்க்கப்படாது முன்கொண்டு வரப்பட்டிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 47,136 அதாவது மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 46 சதவீதமாகும். 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் அதிகார சபையின் பிரதான | முறைப்பாடொன்றின் இறுதி நடவடிக்கை என்பது முறைப்பாட்டின் தன்மையின் அடிப்படையில் மாறக்கூடும் என்பதால் அவ்வாறான சந்தர்ப்பங்களின் அடிப்படையில் நிறைவு செய்யப்படாத காரணத்தினால் முறைப்பாடுகளுக்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது பொருளாகாது. | 2011 ஆம் ஆண்டு முதல் காணப்படும் தீர்க்கப்படும் முறைப்பாடுகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பொறுப்பான முறைப்பாடுகளை தீர்க்கும் பணிப்பொறுப்பு உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.<br><br>மீளாய்வாண்டினுள் 25 மாவட்டங்களிலும் 28 பிரிவுகளுக்கு வகைப்படுத்தப்படக் கூடிய துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் 11187 கிடைத்திருந்ததுடன் இந்த துஷ்பிரயோகங்களுக்கு தாமதிக்காது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அந்த 7492 துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கணக்காய்வுத் திகதி இறுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | அதிகாரசபை நிறுவப்பட்டு 22 வருடங்கள் கடந்துள்ள போதிலும் அதிகாரசட்டத்தின் பிரகாரம் தேசிய தரவு அடிப்படையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் தரவுக் கட்டமைப்பை தற்போது தயாரித்து நிறைவு செய்துள்ளது. பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வேறுபாடுகள் தற்போது டெலிகொம் நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட வாறுள்ளது. | தேசிய தரவு கட்டமைப்பை துரிதமாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இலக்கம் டீஎம்ஏ/2009/(1) இல் 3 ஆம் பந்தியின் பிரகாரம் குறித்த பணியை நிறைவேற்றுவதற்காக போதுமான பதவியணியொன்று உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்குச் இணைப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை. | அதிகாரசபையில் நிலவும் வெற்றிடங்கள் காரணமாக உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக உத்தியோகத்தர் ஒருவரை இணைப்புச் செய்தல் கடினமாகியுள்ளது. | போதிய பதவியணி இணைப்புச் செய்யப்படல் வேண்டும். |